

அறத்தான் வருவதே இன்பம்

# தமிழ் அறம்

தனிச்சுற்று மாத இதழ்

சிந்தனை 5 செயல் 3 | ஆசிரியர் : மருத்துவர். த. இராசலிங்கம் | மார்ச், ஏப்ரல் 2021

## பண்புள்ள தமிழ் நெஞ்சங்களுக்கு வணக்கம் !

**தேர்தல் வாக்குறுதிகளும் - தேறாத விடைகளும் :**

தேர்தல் நேரத்தில் வாக்குறுதிகளை அள்ளி வீசுவது என்பது அரசியல் கட்சிகளுக்கொன்றும் புதிதல்ல. வாக்குகளை ஈர்ப்பதில் மேற்கொள்ளும் வியூகங்களில் இதுவும் ஒன்று. ஏதாவது ஒன்றில் வாக்காளன் மயங்கிவிட மாட்டானா என்று எதையும் விட்டு வைக்காமல் அத்தனை விதமான வேடங்களையும் போடுவதுதான் தேர்தல் வாக்குறுதி. தேர்தல் கூத்து முடிந்தவுடன் வேடங்களும் கலைந்துவிடும் என்பதும் மக்களுக்குத் தெரியும். அதனால் பொதுவாக தேர்தல் வாக்குறுதிகளை யாரும் நம்புவதில்லை. அதை நம்பி யாரும் வாக்களிப்பதும் இல்லை. மேலும் ஓர் அரசியல் கட்சி ஆட்சிக்கு வந்தவுடன், அது அளித்த வாக்குறுதிகளை நிறைவேற்றியதா அல்லது நிறைவேற்ற முயற்சி மேற்கொண்டதா என்றெல்லாம் மக்கள் கேள்வி கேட்பதில்லை. மக்கள் எளிதில் எதையும் மறந்துவிடுவார்கள் என்பதால், சென்ற தேர்தலில் கொடுத்த வாக்குறுதிகளையே இந்த தேர்தலிலும் கொடுப்பார்கள். எந்த அரசியல் கட்சியும் இதற்கு விதிவிலக்கல்ல.

நாணயம் தவறுவது, வாக்குறுதி தவறுவது என்பது தவறான செயல். குடிமக்களை ஏமாற்ற நினைக்கின்ற இந்தச் செயலை அரசியல் கட்சிகள் செய்வது மக்களாட்சிக்கு எதிரானது. நிறைவேற்ற முடியாத பெரிய பெரிய திட்டங்களை வாக்குறுதிகளாக அளிக்கக் கூடாது. அவ்வாறு பெரிய வாக்குறுதிகளை அளிக்கும்போது அது எவ்வாறு நிறைவேற்றப்படும்? அதற்கான பொருள் ஆதாரம் என்ன? என்பது பற்றியும் தெளிவுபடுத்த வேண்டும். வழங்கப்பட்ட வாக்குறுதி நிறைவேற்றப்படவில்லையென்றால், அடுத்த தேர்தலுக்கு முன்பு நாட்டு மக்களிடம் வருத்தம் தெரிவிக்க வேண்டும். அதுதான் மக்களாட்சியின் மாண்பாகும்.

தேர்வு வருகிறது. மாணவன் சில கேள்விகளுக்கு தவறாக விடையெழுதிவிட்டான். அடுத்த தேர்விலும் அதே கேள்விகள். அப்பொழுதும் தவறான விடையே எழுதினால்... எப்பொழுதுதான் திருத்திக் கொள்வது? கட்சிகள் கொடுக்கும் வாக்குறுதிகள் தேறாத விடைகளாகிவிடக் கூடாது.

பல முறை நடுவண் அரசின் அமைச்சரவையில் இடம் பெற்ற மாநிலக்கட்சிகள் அப்பொழுதெல்லாம் தாங்கள் கொடுத்த தேர்தல் வாக்குறுதிகளை நிறைவேற்ற அழுத்தம் கொடுக்க முயற்சி மேற்கொள்ளாமல், இப்பொழுது தேர்தல் வந்தவுடன் மீண்டும் அதே வாக்குறுதிகளை அவிழ்த்து விடுகின்றன. கல்வி, பொதுப்பட்டியலுக்குப் போய் 45 ஆண்டுகளாகி விட்டன. அதை மாநிலப் பட்டியலுக்குக் கொண்டுவர இதுவரை குரல் கொடுக்காமல், இப்பொழுது கல்வியை மாநிலப் பட்டியலுக்கு கொண்டு வருவோம் என்கின்றனர். எப்படியோ நல்லது நடந்தால் சரி என்று காத்திருக்கின்றனர் மக்கள்.

**எப்படியிருக்க வேண்டும் கட்சிகளின் அணுகுமுறை :**

1) வாக்குகளை கவர்வதற்காக பொய்யான, நிறைவேற்ற முடியாத வாக்குறுதிகளை அளிக்கக் கூடாது.
2) நாட்டை வளர்ச்சிப்பாதையில் இட்டுச் செல்வதாக இருக்க வேண்டும் வாக்குறுதிகள்.
3) எந்த ஒரு வாக்குறுதியை அளிக்கும் போதும் அதை நிறைவேற்றும் வழிகளையும் சிந்தித்து அறிவிக்க வேண்டும்.
4) வாக்குறுதிகள் முகமூடிகளாக இல்லாமல், அரசியல் கட்சிகளின் உண்மை முகமாக இருக்க வேண்டும்.
5) வறுமையில் உள்ள பெற்றோர், தம் பிள்ளைகளின் பிறந்தநாளுக்கு புத்தாடை வாங்கித்தருவதாக கொடுத்த வாக்குறுதியை செயல்படுத்த எப்படி வருந்தி உழைப்பார்களோ, அதுபோல், வெற்றி பெற்று ஆட்சியமைக்கும் அரசியல் கட்சியினர் கொடுத்த தேர்தல் வாக்குறுதிகளை நிறைவேற்ற உண்மையாகப் பாடுபட வேண்டும்.

செய்வார்களா நம் அரசியல் தலைவர்கள்?



அன்புடன்
**ஆசிரியர்.**

# நல்லதமிழ் கையாள!

## பிறமொழி சொற்களுக்கான தமிழ்ச் சொற்கள்

| <u>பிறமொழி</u> | | <u>தமிழ்</u> |
|---|---|---|
| பாரம் | – | சுமை |
| பாரா | – | காவல் |
| பாராசூட் | – | வான்குடை |
| பார்சல் | – | பொதி |
| பார்வதி | – | மலைமகள் |
| பார்க்கிங் | – | நிறுத்தகம் |
| பார்மசி | – | மருந்தகம் |
| பால்கனி | – | மேல்மாடம் |
| பால்ய சிநேகிதன் | – | இளமைக்கால நண்பன் |
| பாலகன் | – | குழந்தை, சிறுவன் |
| பாவி | – | தீயோன் |
| பாவம் | – | தீவினை |
| பானம் | – | சுவைநீர் |
| பானு | – | கதிரவன், ஞாயிறு |
| பிம்பம் | – | உருவம் |
| பிரச்சனை | – | சிக்கல் |
| பிரச்சாரம் | – | பரப்புரை |
| பிரகாசம் | – | பேரொளி |
| பிரகடனம் | – | அறிவிப்பு |
| பிரசுரம் | – | வெளியீடு |
| பிரசவம் | – | மகப்பேறு |
| பிரசங்கம் | – | சொற்பொழிவு |
| பிரசித்தம் | – | புகழ்பெற்ற |
| பிரதானம் | – | புகழ்பெற்ற |
| பிரதமர் | – | தலைமை அமைச்சர் |
| பிரதி | – | படி |
| பிரதிநிதி | – | நிகராளர் |
| பிரதிபலன் | – | கைம்மாறு |
| பிரதிவாதம் | – | எதிர்வழக்கு |

– தொடரும்






**மெய்ம்மை :**

நல்ல வலிமையான பசு ஈன்ற கன்றாக இருக்குமானால், இளங்கன்றும் நல்ல விலை போகும். அதுபோல, செல்வத்தால் வலிமை மிக்கவர்கள் கல்வியறிவு இல்லாதவர்களாக இருந்தாலும் அவர்களின் சொற்கள் செல்லுபடியாகும். ஆனால் வறுமை நிலையில் உள்ளவர்களின் சொற்களோ, ஈரம் குறைவாக உள்ள நிலத்தில் கலப்பை இறங்காதது போல, கேட்போரின் காதில் நுழையாது சென்றுவிடும் என்ற உலகியல் உண்மையை உணர்த்தும் பாடல் இதோ,

**நல்லாவின் கன்றாயின் நாகும் விலைபெறூஉம்**
**கல்லாரே ஆயினும் செல்வர்வாய்ச் சொல்செல்லும்**
**புல்லீரப் போழ்தின் உழவேபோல் மீதாடிச்,**
**செல்லாவாம் நல்கூர்ந்தார் சொல்.**

பேய்ச்சுரைக்காயை நல்லா உப்பு போட்டு நெய், பால், தயிர், பெருங்காயம் ஆகியவற்றைக் கலந்து சமைத்தாலும் அதன் கசப்புத்தன்மை மாறாது. அதுபோல மனிதர்களிலும் சிலர் உள்ளனர். யாருக்கும் அடங்காத குணமுடையவர்கள், என்னதான் அறநூல்களைக் கற்றாலும் என்றைக்கும் திருந்தி அடங்கி ஒடுங்கி வாழப் போவதில்லை என்ற பாடத்தைக் கற்றுத் தரும் பாடல் இதோ,

**இடம்பட மெய்ஞ்ஞானம் கற்பினும் என்றும்**
**அடங்காதார் என்றும் அடங்கார் - தடங்கண்ணாய்**
**உப்பொடு நெய்பால் தயிர்காயம் பெய்திடினும்**
**கைப்பறா பேய்ச்சுரையின் காய்.**

– தொடரும்

வரலாறுக்கு முந்தைய காலம் தொட்டு, இராபர்ட கிளைவ் கோட்டையைப் பிடிக்கும் வரை நான்காயிரம் ஆண்டுகளுக்கும் மேலாக தொடர்ந்து ஒரு மொழி ஒரு நாட்டின் ஆட்சிமொழியாக இருந்துள்ளது என்றால் அது தமிழ் மட்டுமே.




# சிலப்பதிகாரம்

மருத்துவர். த. இராசலிங்கம்

## புகார்க் காண்டம்

கோவலன் – கண்ணகி திருமணம் முதல் இருவரும், மதுரைக்குப் புறப்பட்டுச் சென்ற நாள்வரை, சோழநாட்டு காவிரிப்பூம்பட்டினத்தில் நடைபெற்ற நிகழ்வுகளைக் கூறும் பகுதி.

சென்ற இதழ் தொடர்ச்சி...

### 68. மாதவி கானல் வரிப்பாடல்

கோவலனின் கானல்வரிப் பாடல் கேட்டு
கோலமயில் பூங்கொடியாள் கொண்டாள் ஐயம்
பாவலனின் நெஞ்சுக்குள் நிலையாய் வேறோர்
பாவையவள் குறிப்பும்உள் ளதுவே என்று
தூவலாக விழுந்திட்ட பொல்லா எண்ணம்
துணையாக இருந்தவன்மேல் ஐயம் கொள்ள,
காவலனின் கையிருந்த யாழும் வாங்கி
கன்னியவள் பாடிட்டாள் கானல் பாடல்.

ஆவலுடன் அன்னமும்புன் னைமலர் கண்டு,
ஆம்பலும்தான் மலர்வதுபோல் அறியா தலைவி
பூவணையும் சோலையிலே பார்த்த தலைவன்
போனதெங்கே! புரியாது தவித்தி ருக்க,
மேவவரும் கடல்நீரே! நெய்தல் மலரே!
என்நிலையை அவர்கண்டு சொல்லு வீரே!
“தாவவரும் தண்தென்றல் தகித்தல் போலே
தளிர்நடையாள் தன்நிலையும் மறந்தா ளென்று...”

நோவசெய்யும் காமநோயும் கொடுக்கும் துன்பம்
நீயன்று தந்தெங்கோ சென்ற தாலே
சேவலோடு பெடையும்தான் சேர்தல் கண்டு
செவ்விதழும் சோர்ந்திடுமே கண்கள் பொங்க
கூவமறந்து குயிலினமும் இருத்தல் போலே
கொடுங்கானில் வாழ்கின்றேன் வருவா யென்று
நாவாயும் கடல்மேலே அலைதல் போலே
நானிங்கு நலிகின்றேன் அருள்வாய் என்று
சீவசீவ சொட்டுகின்ற பதநீர் போலும்
செவ்வழில்பாலை மாதவியும் பண்ணில் பாட,
காவடியின் இருமுனைபோல் மேலும் கீழும்
கைக்கிளைசேர் குரல்போலும் இருத்தல் கண்டு,
கவலையுற்றான் கோவலனும் காய்தல் கொண்டு
கண்சிவந்தான் ; காலமதன் கையில் வீழ்ந்தான்
அவதியுற்றான் ; ஆய்ந்தறியான் அறிவும் கெட்டு
அக்கணமே எழுந்திட்டான் இடத்தை விட்டு.

### 69. கோவலன் பிரிந்தான்

மாயப்பொய் பலகூட்டும் மாயத் தாளோ?
மனமெல்லாம் தேயத்தான் மருகு வாளோ!
தூயவளின் துணையதனைத் துணித்தல் வேண்டி
தொலைவாக சென்றிட்டான் தனிமை வேண்டி.
சாயத்தான் மடிதேடி வந்த அன்பும்
சமன்செய்யா கோல்போலும் சாய்ந்து போக,
தீயைத்தான் மிதித்தவனாய் திரிதல் கொண்டு
திரும்பித்தான் பார்க்காது பிரிந்து சென்றான்.

### 70. மாதவி கலக்கம்

தேயத்தான் அவரன்பை இழக்க மாட்டேன்
தெரியாமல் பெரும்பிழையும் இழைத்து விட்டேன்
தாயைத்தான் தன்குழவி பிரிதல் உண்டோ?
தவறைத்தான் பொறுத்திடலே தாய்மை அன்றோ?
காயத்தால் அவனுள்ளம் வாடு தற்கு
கானல்வரிப் பாடலுமே கரணி யாக,
பாயத்தான் கண்களிலே நீரின் வெள்ளம்
பதறியவள் பாவலனின் பின்னால் செல்ல...

### 71. மாதவி தனியே செல்லல்

மலர்விட்டு மணமும்தான் பிரிதல் போலும்
மரம்விட்டு மண்ணும்தான் விலகல் போலும்
உளம்கெட்டு உறவினிலே விரிசல் தோன்ற
உயிரதுவும் பறந்ததுபோல் உடலும் வெம்ப,

பலர்தூற்றும் பழிக்கஞ்சா மாதவி யாளும்
பார்த்திருந்தாள் கோவலனும் வருவா னென்று
வளர்ந்திட்ட நினைவுகளில் பொழுதும் செல்ல...
வாடியவள் தன்வீடு தனியே சென்றாள்.

## 72. நிலாமுற்றத்து பள்ளியறையில்

எண்ணங்களை கோவலனின் பின்னால் விட்டு
எப்படியோ மாதவியும் வந்தாள் வீடு
கண்ணிரண்டில் உறக்கமதும் வராது போக
கவலையிலே சுடுநெஞ்சம் கனன்று வேக,
பொன்னெனவே மின்னுகின்ற நிலவின் முற்றம்
பூவையவள் பூவுடலை பற்றித் தீய்க்க
பெண்ணவளும் போய்வீழ்ந்தாள் படுக்கை தன்னில்
பெரும்சுமையாய் பேதையவள் தலையும் சாய்க்க...

## 73. மாதவி தனிமைத் துயரம்

பாய்ந்துவந்த கண்ணீர் பால்முகத்தில் ஓட,
பவளமல்லி பூக்கள் பக்கத்தில் வாட,
ஆய்ந்தெடுத்த வாழ்வா? அதற்குரிமை தேட?
ஆனாலும் அருகில் அவன்துணையை நாட...
தேய்ந்தாலும் நிலவே! நீவளர்தல் கண்டு
திரிந்தாலும் உள்ளம் அவர்திரும்பல் உண்டே.
ஓய்ந்திடாத எண்ணம் ஓர்நினைவாய் கொண்டு
உறங்காது மாதவி உணர்விழந்துப் போனாள்.

## 74. தேனான வாழ்வும் திரும்புமா?

இளவேனில் தென்றல்தான் இதமாய் வீச,
எழுந்தமர்ந்தாள் மாதவியும் இருக்கை மேலே
நலமெல்லாம் நாடுகின்ற நல்ல தோழி
நட்புடையாள் வசந்தமாலை அங்கு வந்து
மலைதந்த சந்தனத்தில் மசித்த மஞ்சள்
மாதவியின் மேனியெங்கும் மணமாய் பூச
உளமெல்லாம் எரிகின்ற உணர்வுத் தீயில்
உருகாதோ உடல்புனைந்த ஒப்பனை எல்லாம்?

ஓடுகின்ற நீரின்மேல் எழுதும் சொல்லாய்
ஒட்டாமல் போய்விடுமோ? அவனின் அன்பும்
வாடுகின்ற மனதினிலே வாழ்வும் இன்று
வகையிழந்து போகத்தான் வருந்தல் நன்றோ?
கூடுகின்ற கோவலனின் குன்றா அன்பை
கொணர்ந்திங்கு வாழ்ந்திடுவேன் குறையே இன்றி
தேடுகின்ற தேறுதலாய் தெளியா நெஞ்சில்
தீர்வைத்தான் தேடினாளே மாதவி யாளும்.

## 75. கோவலனுக்கு மடல் வரைதல்

கட்டவிழ்ந்து குலைந்த கனிந்துவிட்ட காமம்
கன்னியவள் நெஞ்சில் கரைபுரண்டு மோத
விட்டகன்று போன விரும்பியதோர் வாழ்வும்
விரைந்துபெறல் வேண்டி வேட்கையவள் கொண்டு
சுட்டெரிக்கும் மனதை சொல்லாகக் கோர்த்து
சொல்லுக்குச் சொல்லில் சுகந்தமதைச் சேர்த்து
வெட்டிவேரும் மணமே வீசுகின்ற தாழம்
விரிந்தாடும் வெண்மை தோகையுமெ டுத்து

மொட்டவிழ்ந்து மலர்ந்த மல்லியோடு பிச்சி
முத்தான கருமுகை செங்கழுநீர் செண்ப(கு)ம்
கட்டிவைத்து அழகாய் தொடுத்திட்டாள் மாலை
காரிகைதன் மனதை வடித்திட்டாள் அதிலே
பட்டுபோன்ற மென்மை செம்பஞ்சு குழம்பில்
பறித்துவைத்த பசிய பித்திகையின் காம்பு
ஏட்டினிலே எழுதும் எழுத்தாணி யாக
எழுதினாளே மடலும் எண்ணங்களை தோய்த்து.

## 76. வசந்தமாலையிடம் மடல் கொடுத்தனுப்புதல்

வரைந்தமடலை கண்ணில் ஒற்றி
வசந்தமாலை கையில் தந்து
விரைந்துநீயும் சென்று இந்த
விளக்கமான மடலும் தன்னை
மறைந்துவாழும் கோவலன் கண்டு
மறக்காமல் சேர்ப்பாய் இன்றே
இரந்துநின்றாள் மாதவி பெண்ணாள்
இன்தோழி தோளும் பற்றி.

## 77. வசந்தமாலை கோவலனைக் காணுதல்

காலத்தின் வாயில் வீழ்ந்து
காடுபல கரந்து வாழ்ந்து
ஞாலத்தில் மீதி நாள்கள்
நலம்விளங்க வாழ எண்ணி
கூலக்கடைத் தெருவின் ஓரம்
கோவலனும் நடந்து செல்ல,
கோலமயில் வசந்த மாலை
குறுக்கேவந்(து) நின்றாள் அங்கே!

– தொடர்ச்சி அடுத்த இதழில்

**மருத்துவர். த. இராசலிங்கம்**

# அரசை வழிநடத்தும் அமைச்சர்

அக்காலத்தில் மன்னராட்சியில் அரசின் முழுப் பொறுப்பும் மன்னனையே சார்ந்திருந்தது. ஆனால் மன்னர்க்கு நன்னெறி காட்டும் பொறுப்புடையவர்களாக அமைச்சர்கள் விளங்கினார்கள். எப்பொருள் எத்தன்மையானது என்பதை ஆராய்ந்து முடிவான கருத்தை மன்னனிடம் தயக்கமின்றி எடுத்துரைப்பார்கள் அமைச்சர்கள். அவ்வாறு அமைச்சர் பக்குவமாக நடந்து கொள்ளும் முறையை **கலிங்கத்துப்பரணி** என்னும் நூலில் நாம் காணலாம்.

கலிங்கநாடு என்பது இன்றைய ஒடிசா. அதை ஒரு சிற்றரசன் ஆண்டு வந்தான். அவன் சோழமன்னனுக்குச் செலுத்த வேண்டிய திறையை (கப்பம்) செலுத்தத் தவறியதால் வெகுண்டெழுந்த சோழமன்னன் பெரும்படையை கலிங்கத்தின் மீது ஏவினான். கலிங்க மன்னனோ தன் ஆற்றலும், பகையரசன் ஆற்றலும் அறியாமல் வெஞ்சினம் பேசினான்.

**கான் அரணும் மலையரணும் கடலரணும்**
**சூழ்கிடந்த கலிங்கர் பூமி**
**தான் அரண முடைத்தென்று கருதாது**
**வருவதும் அத் தண்டு போலும்**

என்று இறுமாந்து பேச, அமைச்சருக்கோ மன்னன் அறிவு கலங்கி ஆராயாமல் பேசுகிறான் என்று புரிந்தது. மன்னனை எதிர்த்துப் பேசுகிறோமே என்று தயங்காமல், எழுந்து நின்று பதறாமல் தன் கருத்துகளை முன்வைத்து, “சோழர்படையை வெல்ல முடியாது'' என்று உறுதியாக அமைச்சர் எடுத்துரைக்கின்றார்.

**அரசர் சீறுவ ரேனும் அடியவர்**
**உரைசெ யாதொழி யார்கள் உறுதியே**

என்றதோடு, “மன்னவா ! இன்று நீ சீற்றம் கொண்டாலும் நாளை போர்களத்தில் நிற்கும்போது என் சொல்லை நினைப்பாய் !”

**இன்று சீறினும் நாளைஅச் சேனைமுன்**
**நின்ற போழ்தினில் என்னை நினைத்தியால்**

என்று மன்னனை இடித்துரைத்தார் அமைச்சர் என்பதை படிக்கும்போது அமைச்சர்கள் எத்துணை பொறுப்புள்ளவர்களாக, மன்னன் நலனிலும், நாட்டு மக்கள் நலனிலும் நாட்டம் உள்ளவர்களாக வாழ்ந்துள்ளார்கள் என்பதை இலக்கியம் வாயிலாக அறிந்து வியப்பு கொள்ளாமல் இருக்க முடியவில்லை. ❍

நம்புங்கள் !        நம்மால் முடியும்!

## மக்கள் சக்தி இயக்கம்

# வாக்காளர் விழிப்புணர்வு பரப்புரை

**பண்புள்ள வாக்காளப் பெருமக்களே !**

- தேர்தல், அரசியல் கட்சிகளுக்கானது மட்டுமல்ல; மக்களாகிய நாம்தான் தேர்தல் மூலம் ஆட்சியமைக்கின்றோம்.
- மன்னராட்சியில் நல்லாட்சிக்கு மன்னர் பொறுப்பு. மக்களாட்சியில் நல்லாட்சிக்கு மக்கள்தானே பொறுப்பு?
- மக்களின் சிந்தனைகள் சீரானதாக இருந்தால் அமைகின்ற ஆட்சி நேரானதாக இருக்கும்.
- வாக்களிக்க வேண்டுமென்ற அக்கறை உங்களுக்கு இல்லையென்றால், கட்சிகளுக்கு உங்கள் மேல் அக்கறை இல்லாமல் போய்விடும்.
- வாக்குச் சாவடியில் நீங்கள் எடுத்துவைக்கும் காலடி நல்லாட்சி அமைவதற்கான முதல்படி!
- வாக்களிப்பது நமது குடியாட்சிக் கடமை! பாடுபட்டு பெற்ற உரிமை! அதை வீணாக்காதீர்கள்! தகுதியானவரைத் தேர்ந்தெடுக்க உங்கள் வாக்கைப் பயன்படுத்துங்கள்!
- எனது ஒரு வாக்கு என்ன மாற்றத்தை ஏற்படுத்தும் என எண்ணாதீர்கள்! ஒரு வாக்கில் ஆட்சி கவிழ்ந்த கதை நமக்குத் தெரியும்.
- எனது வாக்கு விற்பனைக்கு அல்ல ! அது என் உரிமை ! என்ற பெருமிதத்தோடு, காசு, பணம் எதிர்பார்க்காமல் கண்ணியத்துடன் வாக்களிப்போம்!

## வருகின்ற 6-4-2021 சட்டமன்றத் தேர்தலில்,

**மதுவால் தள்ளாடாத தமிழகம் காண,**

முழுமையான மதுவிலக்கை செயல்படுத்தும் கூட்டணிக்கே வாக்களிப்பீர்!

**வளமான தமிழகம் காண,**

தமிழக ஆறுகள் இணைப்பு – நீர்நிலைகள் பராமரிப்பு – மேற்கு தொடர்ச்சி மலையின் இயற்கைவளம் பாதுகாப்பு இவற்றிற்கு உறுதியளிக்கும் கூட்டணிக்கே வாக்களிப்பீர்!

**வலிமையான தமிழகம் காண,**

மாநில அரசுப் பணிகளை தமிழ் நாட்டவர்க்கே வழங்கவும், மத்திய அரசுப் பணிகளில் அந்தந்த மாநிலத்தவர்க்கு முன்னுரிமை வழங்கவும் உறுதி ஏற்கும் கூட்டணிக்கே வாக்களிப்பீர்!

# மக்கள் சக்தி இயக்கம்

**தூத்துக்குடி மாவட்டம் :**

மக்கள் சக்தி இயக்கம் சார்பாக வாக்காளர் விழிப்புணர்வு பரப்புரையை 14.03.2021 அன்று தூத்துக்குடியில் மாநிலத்தலைவர். பண்பாளர் **மருத்துவர். த. இராசலிங்கம்** தொடங்கி வைத்தார். நிகழ்ச்சியில் மாவட்டச் செயலாளர் பண்பாளர் **கந்தசாமி**, இணை செயலாளர் பண்பாளர் **சோமசுந்தரம்**, பண்பாளர் **கந்தப்பன்**, ஓட்டப்பிடாரம் ஒன்றியப் பொறுப்பாளர் ஆசிரியர் **பாலசுந்தரம்**, மகளிரணி **தமயந்தி**, **சிவஜோதி** ஆகியோர் கலந்து கொண்டனர்.





**புதுக்கோட்டை மாவட்டம் :**

**கந்தர்வக்கோட்டை ஒன்றியக் கிளை தொடக்க விழா :**

மக்கள் சக்தி இயக்கத்தின் கந்தர்வகோட்டை ஒன்றியக் கிளை தொடக்கவிழா மங்கனூர் சிற்றூரில் 21.2.2021 அன்று புதுக்கோட்டை மாவட்டச் செயலாளர் பண்பாளர் முனைவர். **சு. கணேசன்** தலைமையில், தஞ்சை மாவட்டச் செயலாளர் பண்பாளர் பேரா. **ச. முருகானந்தம்** முன்னிலையில் நடைபெற்றது. மாநில ஆலோசகர் பண்பாளர் முனைவர். **க. ஜெயப்பிரகாஷ்**, பண்பாளர் **அந்தோணி**, வங்கி முன்னாள் அலுவலர் பண்பாளர் **எம். லெட்சுமணன்** வாழ்த்துரை வழங்கினார்கள். மாநிலப் பொதுச்செயலாளர் பண்பாளர் முனைவர் **லெ. பாஸ்கர்** சிறப்புரையாற்றினார். இருபதுக்கும் மேற்பட்ட இளைஞர்கள் கலந்து கொண்டு சிறப்பித்தனர். நிகழ்ச்சி ஏற்பாட்டை கந்தர்வகோட்டை ஒன்றியப் பொறுப்பாளர் பண்பாளர் பேராசிரியர் **க. ஆனந்தராஜ்** செய்திருந்தார்.





மங்கனூர் மக்கள் சக்தி இயக்கத்தின் சார்பாக 9.3.2021 அன்று ஊராட்சி ஒன்றிய நடுநிலைப்பள்ளியில் பயிலும் மாணவர்களை ஊக்குவிக்கும் விதமாக பல்வேறு போட்டிகள் நடத்தப்பட்டு பரிசுகள் வழங்கப்பட்டன.

**பெரம்பலூர் மாவட்டம் :**

பெரம்பலூர் மாவட்ட ம.ச.இ. உறுப்பினர் கூட்டம் 10.2.2021 அன்று மாநில துணைத்தலைவர் பண்பாளர் முனைவர். **க. பெரியசாமி** தலைமையில் நடைபெற்றது. மாவட்டச் செயலாளர் பண்பாளர் **சிவக்குமார்**, இணை செயலாளர் பண்பாளர் **சௌந்தரராஜன்**, பொருளாளர் பண்பாளர் **வெங்கடாசலம்**, செயற்குழு உறுப்பினர் பண்பாளர் **இரமேஷ்** முன்னிலை வகித்தனர்.

தமிழகத்தில் இயங்கி வரும் மாவட்ட, வட்டார, ஊரக நூலகங்களில், நாளிதழ் மற்றும் வாரஇதழ்கள் தவறாமல் கிடைக்கவும், நூலகங்கள் சிறப்பாக செயல்படவும் அரசு நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும் உட்பட பல தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

கூட்டத்தில் பெரம்பலூர் ஒன்றியப் பொறுப்பாளராக பண்பாளர் **செங்கோட்டையன்**, வேப்பந்தட்டை பொறுப்பாளராக பண்பாளர் **இராசேந்திரன்**, வேப்பூர் பொறுப்பாளராக பண்பாளர் **இரமேஷ்**, ஆலத்தூர் பொறுப்பாளராக பண்பாளர் **து. இராசேந்திரன்** ஒருமனதாகத் தேர்வு செய்யப்பட்டனர்.

பண்பாளர்கள் செல்வேந்திரன், இரவி, மார்ட்டின், திருஞானம் கலந்து கொண்டனர்.



**கரூர் மாவட்டம் :**

கரூர் மாவட்ட ம.ச.இ. உறுப்பினர் கூட்டம் 14.02.2021 அன்று கரூர் காந்தி கிராமம் கலைகள் மற்றும் கைவினை மையத்தில் நடைபெற்றது. மாநில துணைபொதுச் செயலாளர் பண்பாளர் **சுகுமார்** தலைமை வசித்தார். மாவட்டச் செயலாளர் பண்பாளர் **விசுவநாதன்** வரவேற்றார். கூட்டத்தில் பண்பாளர் **வெ.பி.முத்து**, **மாரியப்பன்** உட்பட நிருவாகிகளும் மகளிரணி நிருவாகிகளும் கலந்து கொண்டனர்.





# வாசகர் நெஞ்சம்

பண்புள்ள ஆசிரியர் அவர்களுக்கு,

சிலப்பதிகாரம் காவியத்தில், கடல்விளையாட்டு நடைபெறும் கடற்கரையின் தோற்றத்தை விவரிக்கும் இடத்தில் அங்கே வெண்மணல் பரப்பில் தென்பட்ட கடைகளை,

"கன்னியவள் மலர்முகத்தில் காத்தி ருந்து
காலத்தே வந்துவிடும் பருக்கள் போலே"

என்று உவமையாக கூறியுள்ள அழகும், கடற்கரையில் பல்வேறு விளக்குகள் அமைக்கப்பட்டு அதிக வெளிச்சத்துடன் விளங்கியது என்பதை "செல்வழியில் சிறுகடுகும் காட்டும் விளக்கு" என்று சொல்லியுள்ள நயமும் அருமை!

கடற்கரைச் சோலையில் கோவலன் பாடிய கானல் வரிப்பாடலின் கருப்பொருள்தான் மாதவி ஐயம் கொள்ள ஏதுவாக அமைந்து விட்டது என்பதை எடுத்துக்காட்ட, களிப்புடன் வரிப்பாடல் பாடத் தொடங்கியவன், பின்பு கருத்தழிந்து பாடினான் என்று எழுதியுள்ள பாங்கு பாராட்டுக்குரியது.

– கவிஞர். **கலியுகன் கோபி,** சென்னை.

பேரன்புசால் ஆசிரியர் அவர்களுக்கு,

நீரோடை பாய விட்டு,
நெடுங்கதிர்கள் ஆட விட்டு
கண்ணெனவே காக்கும் தாயே!

என பூமித்தாயை போற்றும் விதமாக "பூமி" கவிதை மிக அருமை!

கோவலன் மாதவிக்கிடையே பிணக்கு ஏற்பட்டுள்ளதை,

பூவேறு மணம்வேறு ஆன தாலே
............
பாவேறு பண்வேறு ஆன தாலே

என்ற வரிகள் மூலம் விளங்கச் செய்திருப்பது சிறப்பு!

"எண்வகை இசையின் கூறும்
எண்ணமாய் இயைந்து நிற்க
பண்ணுடன் யாழும் மீட்டி
............"


கவி அமிழ்தாய்ச் சிலப்பதிகாரம் சிறந்திருக்கக் கண்டேன்.

மக்கள் சக்தி இயக்கத்தின் மகத்தான பணிகள் போற்றுதலுக்குரியது. கொடையுள்ளம் குறித்து நாலடியார் நவிலும் வெண்பா – பொருள்நயம் சாலச்சிறந்தது.

– கவிஞர். **க. அங்கமுத்து,** தழுதாழை, பெரம்பலூர்.

தமிழ் அறம் இதழ் கிடைக்கப் பெற்றேன். உங்களைப் போன்றவர்களின் சமூகப் பங்கை இதில் சத்தமில்லாமல் மதிப்பிட முடிகிறது.

– மருத்துவர். **பெ. அசோகன்,** பட்டுக்கோட்டை.



# தலைவர்களே சிந்தியுங்கள் !

**சிந்தனையாளர். டாக்டர். எம்.எஸ். உதயமூர்த்தி**

நாம் கொடுக்கும் வரிப்பணத்தைக் கொள்ளையடிக்க அரசியலுக்கு வரும் அரசியல்வாதிகளை எல்லாக் கட்சிகளிலும் பொதுவாக இன்று பார்க்கிறோம். ஊழலும், லஞ்சமும் குறிக்கோள் என நெறிகள் தாழ்ந்த ஓர் அதிகாரவர்க்கம், அரசாங்க இயந்திரம், பல நல்ல காரியங்கள் தொடர்ந்து நல்லமுறையில் நடக்க வேண்டுமானால், நாடு நிரந்தரமான பலனைப்பெற வேண்டுமானால் நம் தலைவர்கள் வேறு விதமாகச் சிந்திக்க வேண்டும். இன்றைய நாட்டின் செல்வம் – மனித சக்தி ; வேலையில்லா இளைஞர்களின் சக்தி.

இளமைச் செல்வத்தை உபயோகித்து, கிராம வளத்தைப் பெருக்க வேண்டும். ஒரு பக்கம் கிராமங்களில் ஏழ்மையும், அறியாமையும். மறுபக்கம் திசை தெரியாது படித்த இளைஞர்கள். அபாரமான அறிவு – சக்தி – ஆற்றல் – திறன் யாருக்கும் பயன்படாமல் கொந்தளித்துக் கொண்டிருக்கிறது. இரண்மையும் இணைத்தால் போதும். நாடு நலம்பெறும். அரசாங்கத் தலைவர்கள் இதை உணர்ந்து செயல்பட்டால் நல்லது. முன்னேற்றம் விரைவில் வரும்.

**மக்கள் சக்தி இயக்கத்தில் உறுப்பினராகச் சேர்ந்து சமுதாயப் பணியாற்ற தொடர்பு கொள்ளுங்கள்**

மாநிலத் தலைவர். **மருத்துவர். த. இராசலிங்கம்.**
**94423 23246**

மாநிலப் பொதுச்செயலாளர். **முனைவர். லெ. பாஸ்கர்.**
**97900 71109**

**தமிழ் அறம் உறுப்பினர் கட்டணம்**
**ஓர் இதழுக்கு ஆண்டுக்கு ஒருமுறை ரூபாய் 100**


கட்டணத்தை பத்திரிக்கையை கொடுத்தனுப்பும் அன்பரிடம் நேரிலோ அல்லது பணவிடையாகவோ, காசோலையாகவோ அல்லது வங்கி கணக்கிலோ செலுத்தலாம்.

**வங்கி கணக்கு விபரம் :**

**T. RAJA LINGAM** A/c No. **344 101 000 001 081**
Indian Overseas Bank,
Puthiamputhur Branch,
IFSC - IOBA 0003441

பணம் அனுப்பியவுடன் குறுஞ்செய்தி அனுப்பவும். நன்றி.

– ஆசிரியர்




# தேர்தல் களம்



திரும்புகின்ற பக்கமெல்லாம் தேர்தல் பேச்சு
திருவிழாபோல் தேர்தலும்தான் தொடங்கி யாச்சு
விரும்புகின்ற வேட்பாளர் எங்கும் காணோம்
வீணாகிப் போய்விடுமோ மக்கள் ஆட்சி?


பணம்கொடுத்தே வாக்குகளை விலைக்கு வாங்கி
பதவிதேடும் போக்கிங்கு பழகிப் போச்சு
மனம்கெடுக்கும் மயக்கத்தில் மதியும் மங்கி
மாற்றமதை தேடிடுமா? வாக்கு வங்கி.

வானத்தை வில்லாக வளைப்பேன் என்றே
வாக்குறுதி வானளவு அள்ளி வீசி,
தானத்தை தன்னலத்தால் தருதல் போன்றே
தந்திடுவார் தருபொருளும் தேர்தல் அன்றே



மணலைத்தான் கயிறாகத் திரிப்பேன் என்று
மனமறிந்து பொய்களையே முழக்கிப் பேசி
கனலைத்தான் சொல்லாக்கி களத்தில் வென்று
காட்டிடுவார் கொள்கைதான் வென்ற தென்று

கல்லில்நான் நாரும்தான் உரிப்பேன் என்று
கடலளவு வாக்குறுதி கயமை பூசி
வெல்லம்போல் இனிக்கத்தான் சொல்வார் இன்று
விளைந்திடுமோ? நாட்டில்தான் நாளும் நன்று.



நல்லவர்கள் தேர்தலிலே நிற்கும் காலம்
நல்லெண்ணம் நமக்கிருந்தால் வந்தே தீரும்
வல்லவர்கள் வந்திடுவார் வைரம் போலும்
வழங்கிடுவார் ஒளியெனவே வாய்மை ஆளும்!

– மருத்துவர். **த. இராசலிங்கம்**

ஆசிரியர், வெளியிடுபவர் :
**மருத்துவர். த. இராசலிங்கம்** MBBS. Dip. Diab.,
திருக்குறள் இல்லம், 4/16, ராம் நகர், தூத்துக்குடி - 628 002.
அலைபேசி : 9442323246.
தொடர்பு முகவரி :
**தங்கம் மருத்துவமனை, புதியம்புத்தூர் - 628 402.**
தூத்துக்குடி மாவட்டம்.

பெறுநர்

அச்சிட்டோர் : அனுசியா அச்சகம், புதியம்புத்தூர்.